ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 4.5 – ஆசைவாய்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.5 – ஆசைவாய்

‡ ஆசைவாய்ச் சென்ற சிந்தையர் ஆகி ⋆
    அன்னை அத்தன் என் புத்திரர் பூமி ⋆
வாச வார் குழலாள் என்று மயங்கி ⋆
    மாளும் எல்லைக்கண் வாய் திறவாதே ⋆
கேசவா ! புருடோத்தமா ! என்றும் ⋆
    கேழல் ஆகிய கேடிலீ ! என்றும் ⋆
பேசுவார் அவர் எய்தும் பெருமை ⋆
    பேசுவான் புகில் நம் பரம் அன்றே ॥ **4.5.1** ॥

சீயினால் செறிந்தேறிய புண்மேல் ⋆
    செற்றல் ஏறிக் குழம்பிருந்து ⋆ எங்கும்
ஈயினால் அரிப்புண்டு மயங்கி ⋆
    எல்லைவாய்ச் சென்று சேர்வதன் முன்னம் ⋆
வாயினால் நமோ நாரணா என்று ⋆
    மத்தகத்திடைக் கைகளைக் கூப்பி ⋆
போயினால் பின்னை இத் திசைக்கென்றும் ⋆
    பிணைக் கொடுக்கிலும் போக ஒட்டாரே ॥ **4.5.2** ॥

சோர்வினால் பொருள் வைத்ததுண்டாகில் ⋆
    சொல்லு சொல்லென்று சுற்றும் இருந்து ⋆
ஆர் வினவிலும் வாய் திறவாதே ⋆
    அந்த காலம் அடைவதன் முன்னம் ⋆
மார்வம் என்பதோர் கோயில் அமைத்து ⋆

மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி ⋆
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்கு ⋆
அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே ‖ **4.5.3** ‖

மேல் எழுந்ததோர் வாயுக் கிளர்ந்து ⋆
மேல் மிடற்றினை உள் எழ வாங்கி ⋆
காலும் கையும் விதிர் விதிர்த்தேறிக் ⋆
கண் உறக்கமதாவதன் முன்னம் ⋆
மூலம் ஆகிய ஒற்றை எழுத்தை ⋆
மூன்று மாத்திரை உள் எழ வாங்கி ⋆
வேலை வண்ணனை மேவுதிர் ஆகில் ⋆
விண்ணகத்தினில் மேவலும் ஆமே ‖ **4.5.4** ‖

மடி வழி வந்து நீர் புலன் சோர ⋆
வாயில் அட்டிய கஞ்சியும் மீண்டே ⋆
கடைவழி வாரக் கண்டம் அடைப்பக் ⋆
கண் உறக்கமதாவதன் முன்னம் ⋆
தொடைவழி உம்மை நாய்கள் கவரா ⋆
சூலத்தால் உம்மைப் பாய்வதும் செய்யார் ⋆
இடை வழியில் நீர் கூறையும் இழவீர் ⋆
இருடீகேசன் என்றேத்த வல்லீரே ‖ **4.5.5** ‖

அங்கம் விட்டவை ஐந்தும் அகற்றி ⋆
ஆவி மூக்கினில் சோதித்த பின்னை ⋆
சங்கம் விட்டவர் கையை மறித்துப் ⋆
பையவே தலை சாய்ப்பதன் முன்னம் ⋆
வங்கம் விட்டுலவும் கடற் பள்ளி மாயனை ⋆
மதுசூதனை மார்பில்

தங்க விட்டுவைத்து ⋆ ஆவதோர் கருமம் சாதிப்பார்க்கு ⋆
என்றும் சாதிக்கலாமே ‖ **4.5.6** ‖

தென்னவந் தமர் செப்பம் இலாதார் ⋆
சேவதக்குவார் போலப் புகுந்து ⋆
பின்னும் வன் கயிற்றால் பிணித்தெற்றிப் ⋆
பின் முன் ஆக இழுப்பதன் முன்னம் ⋆
இன்னவன் இனையான் என்று சொல்லி ⋆
எண்ணி உள்ளத்திருள் அற நோக்கி ⋆
மன்னவன் மதுசூதனன் என்பார் ⋆
வானகத்து மன்றாடிகள் தாமே ‖ **4.5.7** ‖

கூடிக் கூடி உற்றார்கள் இருந்து ⋆
குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து ⋆
பாடிப் பாடி ஓர் பாடையில் இட்டு ⋆
நரிப் படைக்கொரு பாகுடம் போலே ⋆
கோடி மூடி எடுப்பதன் முன்னம் ⋆
கௌத்துவம் உடைக் கோவிந்தனோடு ⋆
கூடி ஆடிய உள்ளத்தர் ஆனால் ⋆
குறிப்பிடம் கடந்துய்யலும் ஆமே ‖ **4.5.8** ‖

வாயொரு பக்கம் வாங்கி வலிப்ப ⋆
வார்ந்த நீர்க் குழிக் கண்கள் மிழற்ற ⋆
தாய் ஒரு பக்கம் தந்தை ஒரு பக்கம் ⋆
தாரமும் ஒரு பக்கம் அலற்ற ⋆
தீ ஒரு பக்கம் சேர்வதன் முன்னம் ⋆
செங்கண் மாலொடும் சிக்கெனச் சுற்றம் ஆய் ⋆

ஒரு பக்கம் நிற்க வல்லார்க்கு⋆
    அரவ தண்டத்தில் உய்யலும் ஆமே ‖ **4.5.9** ‖

‡ செத்துப் போவதோர் போது நினைந்து⋆
    செய்யும் செய்கைகள் தேவபிரான் மேல்⋆
பத்தராய் இறந்தார் பெறும் பேற்றைப்⋆
    பாழித் தோள் விட்டுசித்தன் புத்தூர்க் கோன்⋆
சித்தம் நன்கொருங்கித் திருமாலைச்⋆
    செய்த மாலை இவை பத்தும் வல்லார்⋆
சித்தம் நன்கொருங்கித் திருமால் மேல்⋆
    சென்ற சிந்தை பெறுவர் தாமே ‖ **4.5.10** ‖

அடிவரவு — ஆசை சீயினால் சோர்வினால் மேல் மடி அங்கம் தென்னவன் கூடி வாய் செத்து காசும்

ஆசைவாய் முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்